

திருவாசகம் - 13
திருப்பூவல்லி கதைவடிவில்
கே. வி. குணசேகரம்

வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



# என்னுரை

திருவாசகத்தின் பதின்மூன்றாவது பகுதி திருப்பூவல்லியாகும். இது தில்லையில் அருளியது. ஆன்மாவின் மாயா விசயம் நீங்குவதுபற்றிக் கூறுவது. திருவாசகம் மாணிக்கவாசகரது அனுபவமாகும். அவர் தனது அனுபவங்களைத் திருவாசகத்தின் மூலம் சிவனடியார்க்குச் சொல்கிறார். அதில் பல புராணக் கதைகள் உண்டு. திருவிளையாடல்கள் உண்டு. இவற்றை மனிதர்கள் அறிந்து உய்வடைய வேண்டும் என்பது அவரது விருப்பம். சைவசமயத்தில் எழுந்த நூல்கள் யாவும் மனிதனின் மேம்பாடு கருதியே எழுதப்பட்டன. அதை இப்போதும் பலர் புரிந்து கொள்ளாது இருக்கின்றனர். திருவாசகம் என்றதும் முழுக்க முழுக்கச் சமய தத்துவங்கள் தான் என்ற நிலையை மாற்றி அவை மனிதனை எவ்வாறெல்லாம் மேம்படுத்துகின்றன என்று நான் சமூகத்தில் வாழும் பாத்திரங்களைக் கொண்டு வெளிப்படுத்தி வருகிறேன். இதை விமர்சிக்காவிட்டாலும் எனது இணையத்தில் இலட்சக்கணக்கானோர் வாசிக்கின்றனர். அது எனக்குப் பெரும் மகிழ்வைத் தருகிறது. சிரமப்பட்டு எழுதியமைக்கான பலனும் கிடைக்கிறது. அந்தளவில் பெரு மகிழ்வடைகிறேன்.

நன்றி.

கே.வி.குணசேகரன்

உ

சிவமயம்

# திருப்பூவல்லி

## தில்லையில் அருளியது

## மாயா விசயம் நீங்குதல்

திருச்சிற்றம்பலம்

**இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே**

**துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன்**

**அணையார் புனற்றில்லை அம்பலத்தே ஆடுகின்ற**

**புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 01**

ஆச்சிரமத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாசகத்தைப் பற்றி உரையாற்றினார்; "சிவனடியார்களே, ஒருவன் நித்திரையில் இருக்கும்போது ஏராளமான கனவுகள் வரும். ஒருவன் தனது வாழ்வு எப்படி அமைய வேண்டும் என்று பகலில் எண்ணுகிறானோ, அது இரவில் கனவாக வந்து அவனை மகிழ்விக்கும். அவன் பெரியதொரு அரசாங்க வேலைக்கு விண்ணப்பித்துவிட்டு அவ்வேலை தனக்குக் கிடைக்கும் என்று நம்புகிறான். அதைத் தனது நண்பர்களுக்கும் சொல்லி மகிழ்கிறான். அந்த இனிய நினைவோடு நித்திரைக்குச் செல்கிறான். அது கனவாக வருகிறது. அன்று வேலைக்கு வரும்படி பணிக்கப்பட்டிருந்தது. அதனால் அவன் தனது நண்பர்களைச் சந்தித்து, "இன்று வேலையைப் பொறுப்பேற்றபின் உங்களுக்குப் பெரியதொரு விருந்து வைக்கிறேன்" என்கிறான். பின் தனது காதலியைச் சந்தித்து, "இனி எமது திருமணத்திற்குத் தடை இல்லை. உனது தந்தை எனக்கு வேலையில்லாததால் தானே என்னை வெறுத்தவர். இனி என்ன எமக்குத் திருமணம் தான்" என்று சொல்லி அவளை அணைத்தான். எல்லையில்லா இன்பம் அவனது உடலெங்கும் சிலிர்த்துப் பரவியது. அப்போது அப்பெண்ணின் தந்தை வந்தார். திடுக்கிட்டு எழுந்தான். எல்லாம் இருளாக இருந்தது. விழித்ததும் வந்தது கனவென்று தெரிந்தமையால் கனவில் கண்ட உரிமையான பொருட்களில் இருந்த பற்று இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. அதுபோல ஒரு மெய்யடியாருக்குச் சிவஞானம் வந்ததும், மாயா காரியங்களாகிய

உலகப் பற்றுக்கள் மறைந்து போகும். எனது குரு உலகநாதர். அவர் சிறுவயதிலேயே சிவனிடத்துப் பேரன்பு பூண்டு துறவியானவர். பின் தனது குருவோடு இமயமலைக்குச் சென்று பலகாலம் சிவனைத் தொழுதுவிட்டு ஆச்சிரமத்திற்கு வந்தார். அவர் வந்ததை அறிந்த பெற்றோரும், உறவினரும் அவரைக்காண மிக்க மகிழ்வுடன் வந்து கதைத்தனர். அவருக்கு அவர்களில் யாரையும் அடையாளம் தெரியவில்லை. நான் இமயமலையில் பிறந்தேன். அங்கு வளர்ந்தேன். இப்போதும் அங்கேயே இருக்கிறேன். நீங்கள் யார்?" என்று கேட்டார். அதற்கு அவரின் குரு சொன்னார்; அவருக்குச் சிவஞானம் வந்து கூடியமையால் அவர் இமயமலையில் இருப்பதாகவே நினைக்கிறார். இது சிவஞானத்தின் இயல்பு என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**எந்தையெந் தாய்சுற்றம் மற்றுமெல்லாம் என்னுடைய**

**பந்தம் அறுந்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்**

**மாயப் பிறப்பறுந் தாண்டானென் வல்வினையின்**

**வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. 02**

"சிவனடியார்களே, மனம் எதைச் சார்கிறதோ அதன் மயமாகிவிடும். சிவனைச் சார்ந்த மனது சுத்தமடைகிறது. பின் சிவமயமாகிறது. அதுபோல உலக விசயங்களைச் சார்ந்த மனம் பலவீனமடைந்து அதுவாகிறது. இது உலகின் இயல்பு. இதை மாற்ற முடியாது. மனதில் சிவபெருமானை அன்பின் பெருக்கால் உணர்வோருக்கு உலகப் பற்றுக்கள் எல்லாம் தானாக நீங்கிவிடும். அதுதான் எனது குருநாதருக்கு நடந்தது. இதைப் புரியாத பெற்றோரும் உறவினர்களும் அவருக்குப் பைத்தியம் என்றனர். அவரது தந்தை சொன்னார்; "இவன் சிறுவயது முதல் இப்படித்தான் சம்பந்தமில்லாது பேசுவான். நாம் ஏதாவது சொன்னால் எம்மோடு சண்டைக்கு வருவான். செய்யாத வைத்தியமில்லை. கழிக்காத கழிப்பில்லை. செய்வினை என்றார்கள். சூனியம் என்றார்கள். எல்லாம் செய்தும் பலனில்லை. திடீரென்று ஒருநாள்க் காணாமல் போய்விட்டான். அவன் யாரோ ஒரு சாமியாருடன் சென்றதாகக் கண்டவர்கள் சொன்னார்கள். நாம் அவனைப் பிள்ளை பிடிகாரர் பிடித்துச் சென்றதாக நினைத்தோம். பின் சிலர் அங்கு கண்டோம். இங்கு கண்டோம் என்றனர். ஆறு மாதங்களுக்கு முன் எமது வீட்டுக்கு வந்த சாமியார் ஒருவர் எமது மகன் இமயமலையில் இருப்பதாகவும், இன்னும் ஆறு மாத காலத்தில் இங்கு வருவானென்றும் கூறினார். ஊரவர் இமயமலையில் இருந்து பல சுவாமிகள் ஆச்சிரமத்திற்கு வந்ததாகச் சொன்னார்கள். அதனால் ஆவலுடன் வந்தோம்" என்றார் அவனது தந்தை.

**நாயிற் கடைப்பட்ட நம்மையுமேடார் பொருட்படுத்துத்**

**தாயிற் பெரிதுங் தயாவுடைய தம்பொருமான்**

**மாயப் பிறப்பறுந் தாண்டாளென வல்வினையின்**

**வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ. 03**

சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "நாயைவிடக் கேவலமான என்னை, தாயிலும் பார்க்கப் பேரன்பு கொண்டு மாயங்களைச் செய்யும் எனது பிறப்புக்களை அறுத்து வல்வினைகளைப் பொடிப்பொடியாக்கி ஆட்கொண்டவனுக்கு பூவல்லியைக் கொய்து சமர்ப்பிக்க வேண்டாமோ" என்கிறார்.

**பண்பட்ட தில்லைப் பதிகக்காசைப் பரவாதே**

**எண்பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்துஅனல்**

**விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்**

**புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 04**

"சிவனடியார்களே, தேவர்களாக இருந்தாலும் முதல்வனான சிவபெருமானை உள்ளன்போடு பூசிக்க வேண்டும். மதித்தல் வேண்டும். சிவன் பற்றற்றவன். அவனுக்குத் தேவர்களும் ஒன்றுதான். புழுக்களும் ஒன்றுதான். அதனால்தான் அசுத்தமான பன்றிக்குட்டிகளை அரவணைத்து, அன்புடன் நக்கிப் பாலூட்டியவன். இவற்றையெல்லாம் தேவர்கள்கூட ஒரு பொருட்டாக மதியாது அது கற்பனைக்கதை என்று எண்ணுகின்றனர். அவர்களும் மாயா சக்தியின் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களேயாவர். அவர்கள் இறைவனது அருட்சக்தியைப் புறக்கணித்து, போகவாழ்வு வாழ முயன்றால் அவர்களும் தண்டிக்கப்படுவர்.

பிரமதேவன் நடத்திய யாகத்திற்குச் சிவபெருமான் புறக்கணிக்கப்பட்டார். தக்கன்; "இந்தக் குரங்குக் கண்ணை உடையவனுக்கு எனது மானின் கண்ணை உடைய மகளைத் திருமணம் முடித்துக் கொடுத்தேன். இவன் சுடுகாட்டில் வசிப்பவன். உடல் முழுவதும் சுடலைப் பொடியைப் பூசுபவன். மண்டைஓடுகளைக் கோர்த்து மாலையாகப் போட்டவன். மானிட எலும்புகள் தான் அவனது ஆபரணம். அத்துடன் பித்தன்போல அலைகிறான். அதனால் சிவனுக்கு அவியுணவைக் கொடுக்க முடியாது" என்றபோது தக்கன் கொடுமையாகத் தண்டிக்கப்பட்டது உங்களுக்குத் தெரியும்.

இப்போதும் அது நடக்கிறது. நடராசா சைவசமயத்தை இகழ்பவன். சிவனை நிந்திப்பவன். ஆச்சிரமத்தில் குழப்பம் விளைவிப்பவன். யார் எதைச் சொன்னாலும் கேட்க மாட்டான். அவனைச் சில தினங்களுக்கு முன் சிலர் கடுமையாகத் தாக்கியுள்ளனர். இன்றும் சுயநினைவில்லாது இருக்கிறான். ஒருவருக்குக் கடவுளில் நம்பிக்கை இல்லாதிருக்கலாம். அதற்காகப் பலரும் நம்பும் ஒரு கடவுளை நிந்தனை செய்யக்கூடாது. அது நம்பிக்கை உள்ளவர்களைக் கோபம் கொள்ள வைக்கும். நம்பிக்கை இல்லாதவன் தனது கருத்தைத் தனக்குள் வைத்திருக்க வேண்டும். பெரியவர்களை நிந்திக்கக் கூடாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்**

**ஊனாடி நாடிவந் துள்புகுந்தான் உலகர்முன்னே**

**நானாடி ஆடிநின் றோலமிட நடம்பயிலும்**

**வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. 05**

"சிவனடியார்களே, தேனைச் சொரிகின்ற கொன்றை மலர்களைத் தலையில் அணிந்த சிவபெருமான், என்னை நாடிவந்து ஆட்கொண்டமையை உலகோர் அறிவர். அதனால் எனக்குச் சிவபோதம் உண்டானது. அதனால் நான் அவனின் நினைவாகவே இருக்கிறேன். அதற்காக அல்லிப் பூக்களைக் கொய்து மாலை போட வேண்டாமோ"? என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதனால் சிவனை முழுமையான அன்புடன் வழிபடுங்கள். கோரிக்கை வைக்காதீர்கள். நீங்கள் ஏன் வணங்குகிறீர்கள் என்று சிவனுக்குத் தெரியும். அதனால் அவன் வலியவந்து உதவுவான். சிவபாதம் பரம ஏழை. எப்போதும் சிவநினைவோடு இருப்பவன். கோவில் தொண்டுகளைக் குடும்பமாக வந்து விருப்புடன் செய்பவன். அவனுக்கு மூன்று ஆண்பிள்ளைகளும், ஒரு பெண்பிள்ளையும் உண்டு.

நவராசா சிவபாதத்தின் இரத்த உறவினன். அவன் ஒரு நாள் வந்து, "உனக்கு ஒரு பெண் கல்யாண வயதில் உள்ளது தெரியாதா…?" அவளோடு பிறந்த எனது பிள்ளைக்கு இரண்டு பிள்ளைகள். தேவாரங்களைப் பாடிக்கொண்டு கோவிலைக் கூட்டுவதால் திருமணம் நடைபெறாது. முயற்சி செய். முயற்சி செய்யாவிட்டால் எதுவும் நடக்காது. பிற்போக்கான மூடநம்பிக்கையை எப்போது விடுகிறாயோ அப்போதுதான் உனக்கு விடிவு ஏற்படும்" என்று கூறியபோது சிவபாதம் சொன்னான்; "யார் உனக்கு எனது மகளுக்குத் திருமணம் ஆகவில்லை என்று சொன்னது. சிவன் ஒரு

மாப்பிள்ளையை எனக்கு அனுப்பியிருக்கிறான். அவனும் பெற்றோரும் சென்ற மாதம் வீட்டுக்குவந்து திருமணப்பதிவை முடித்துவிட்டுச் சென்றுள்ளனர். அடுத்த மாதம் திருமணம் நடைபெறும். உனக்கும் சொல்வேன். எனது தந்தையான சிவன் எனக்கு எப்போது எதைச் செய்யவேண்டுமோ அப்போது வலியவந்து செய்வான். இது எனது வாழ்வில் அடிக்கடி நடைபெறும் ஒரு நிகழ்வு. அதற்காகத்தான் நான் தொண்டுகள் செய்கிறேன்" என்றான் சிவபாதம்.

**எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்**

**சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி**

**உருமூன்று மாகி உணர்வரிதாம் ஒருவனுமே**

**புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ. 06**

"சிவனடியார்களே, ஆன்மாக்களைப் பக்குவப்படுத்துவதற்காகச் சிவன் வேள்வித்தீ, ஞானத்தீ, சுடலைத்தீ ஆகிய முன்று நெருப்புக்களை நிலைபெறச் செய்துள்ளார். அவர் பிரம்மா, விட்டுணு, உருத்திரன ஆகிய மும்மூர்த்திகளாகி அவர்களுக்கு அப்பாலும் இருக்கிறார். அப்பரமன் முப்பாழ் ஆகிய மூன்று குணங்களை அழிக்கின்றபோது நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளும் அழிந்து போகின்றன. வேள்வித்தீயால் பாவங்கள் அழிந்து போகின்றன. ஆனால் அகம்பாவத்துடன் செய்யும் வேள்வித்தீயால் வேள்வி செய்தவனே அழிந்துபோகும் நிலையும் உருவாகும். தக்கன், அசுரர்கள் பலர் அவ்வாறு அழிந்தனர். சுடலைத் தீயால் உடல் அழிக்கப்பட உயிருக்குப் புதிய உடல் வந்து சேர்கிறது. ஞானத்தீ பிறப்புக்களை அழித்து ஆன்மாவைச் சிவனின் திருவடி நிழலில் பேரின்பமாக வாழ வைக்கிறது. இதை உணர்பவர்களின் ஆன்மாதான் பக்குவப்படும். சிவன் ஒருவன் தான் முதல்வன். அவன் பிரம்மா, விட்டுணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாக உருவெடுத்தபோதும் அதற்கு அப்பாலும் இருக்கிறான். அச் சிவன் முப்பாழ் ஆகிய முக்குணங்களை அழிக்கின்றபோது நனவு, கனவு, உறக்கம் ஆகிய மூன்று அவஸ்தைகளும் அழிக்கப்படுகின்றன. அந்த முக்குணங்களையும் அழித்த சிவனுக்கு பூக்கொய்து மாலை போடுவேன்" என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

**வணங்கத் தலை வைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து**

**இணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்**

**அணங்கொடணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற**

**குணங் கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 07**

“சிவனடியார்களே, சிவன் தன்னை வணங்குவதற்காகவே எமக்குத் தலையைத் தந்துள்ளான். வாயை வைத்தது அவனது புகழைப் பாடுவதற்கேயாகும். அதற்காகச் சிவனடியார் கூட்டத்தையும் வைத்துவிட்டுத் தில்லையம்பலத்தில் ஆடுகின்ற எம்பெருமானுக்கு நாம் பூக்கொய்து மாலை சூட்டவேண்டாமோ! ஓர் உயிருக்கு இந்திரியங்களைக் கொடுத்து, அவ்வுயிரை நல்லோரோடு சேர்த்து வைத்துப் பின் அம்மையப்பன் மாயமாக உலகை இயக்குவதும், இறைவன் தன்னுடைய மகிமைகளைப் போற்றுவதற்காகவே. நல்லவற்றைச் செய்யப் பிறப்பிக்கப்பட்ட நீ, நல்லவற்றைச் செய்யாவிட்டாலும், தீயவற்றைச் செய்யாதிருந்தால் அது நற்பலனைத் தரும். வாயை இறைவன் தந்தது தன்னைப் போற்ற, நல்ல வார்த்தைகளைப் பேச, ஆனால் பலர் இதை உணராது கண்டபடி பேசுகின்றனர். அதனால் தான் நவராசா உயிர்போகாதிருக்கும் வரை அடி வாங்கினான். கொல்லவரும் கொடிய மிருகத்தைப் பணிந்தால் சில சமயம் அது மனம் மாறும். அதற்கு உதவுவது தலை. தலைபணிய வேண்டும். வாய் அடங்குதல் வேண்டும். இரண்டும் அடங்கினால் நல்லவர்கள் வந்து சேர்வார்கள் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே**

**குறிசெய்து கொண்டென்னை ஆண்டபிரான் குணம்பரவி**

**முறிசெய்து நம்மை முழுதுடற்றும் பழவினையைக்**

**கிறிசெய்த வாபாடிபட பூவல்லி கொய்யாமோ. 08**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “இறைவன் எனக்கு நல்லவழியை வகுத்துத்தந்துள்ளான். பக்தர்களுக்குப் பணிவிடை செய்வதே எனது இலட்சியம் என்று புரிய வைத்தான். அத்துடன் தனது குணவிசேடங்களைப் புகழ்வதற்காக என்னைத் தனது அடிமையாக்கினான். அத்துடன் துன்புறுத்திக் கொண்டிருந்த எனது பழவினையை அவன் அழித்தொழித்தான். அதனால் பூக்கொய்து போட்டு அவனைப் புகழ வேண்டாமா…?” என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்.

இறைவன் நல்வழியை வகுத்துத் தந்துள்ளான். நல்வழி எது என்று மக்கள் எல்லோருக்கும் தெரியும். அப்படியிருக்கப் பலர் தீயவழியையே நாடுகின்றனர். அதனால் தீமைதான் பெருகும். அத்துடன் மற்றவர்களுக்கு உதவி செய்யவே எம்மைப் படைத்துள்ளான். பிறர்க்கு உதவி செய்வதன் மூலம் தனக்குத் தானே உதவி

செய்தவனாவான். அத்துடன் ஒருவன் இறைவனை மெய்யன்புடன் வணங்கிவந்தால் அவனது பழவினைகள் அழிக்கப்படும். அதற்கு உதாரணமாக இக்கதையைக் கூறுகிறேன். சிவராசா சிவபக்தன். நேர்மையானவன். அவனது நண்பன் வரோதயன். கடவுள் நம்பிக்கை இல்லாதவன். குடிப்பவன். ஒரு நாள் சிவராசா தெருவால் நடந்து வரும்போது ஒரு பையைக் கண்டெடுத்தான். அதனுள் ஆங்கிலப் படிவங்கள் பல இருந்தன. அதைக் கவனமாக மூடிய சிவராசா அதைக் கொண்டுசென்று கதிரேசனிடம் ஒப்படைத்துவிட்டு வரோதயனுக்குச் சொன்னான். வரோதயன், வெளிநாட்டில் இருந்து வந்த ஒருவன் தனது பிரயாணப்பை தொலைந்துவிட்டது என்று கூறி, "அதை எடுத்தவர்கள் தந்தால் ஒரு இலட்சம் ரூபா சன்மானமாகக் கொடுப்பதாகச் சொல்லித் திரிகிறான். நீ ஆராயாமல் கொடுத்துவிட்டாய்" என்று வாயில் வந்தபடி ஏசினான்.

"வரோதயா, இறைவன் நல்வழியை வகுத்துத்தந்து அதன்படி வாழுமாறு கூறியுள்ளான். அத்துடன் எல்லோருக்கும் உதவி செய்யும்படியும் கூறியுள்ளான். அதன்படி வாழ்கிறேன். அதை மீறமாட்டேன்" என்றான்.

"பிழைக்கத் தெரியாத முட்டாள்" என்று கூறிவிட்டு வரோதயன் சென்றுவிட்டான். சிறிது நேரத்தில் மோட்டார் வாகனம் ஒன்று வந்து சிவராசாவின் வீட்டு வாசலில் நின்றது. அதிலிருந்து கதிரேசனும் இன்னும் இருவரும் இறங்கி வந்தனர்; "சிவராசா, நீ கண்டெடுத்துத்தந்த பை இவர்களுடையது. இவர்கள் கூறியதுபோல ஓர் இலட்சம் ரூபா தருவார்கள்" என்றபோது, "நான் வணங்கும் சிவன் நல்லவழியில் வாழச் சொல்லியிருக்கிறான். மற்றவர்களுக்கு உதவி செய்யச் சொல்லியிருக்கிறன். நான் அதைத்தான் செய்தேன். அதனால் பணம் பெறமாட்டேன்" என்றான் சிவராசா. அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அவன் பணத்தைப் பெறவில்லை.

கதிரேசனுடன் கூட வந்த பெரியவருக்கு சிவராசாவுக்கு ஏதாவது ஓர் உதவி செய்ய வேண்டும் போல இருந்தது. அப்பொழுது சிவராசாவின் மகள் கோவிலால் வந்தாள். அவள் நல்ல அழகி. பெரியவருடன் வந்தவன் அவளை மெய்மறந்து ரசித்தான். தேவதை ஒன்று வானில் இருந்து வந்ததைப்போல இருந்தது. அவர்கள் சென்றுவிட்டனர். அவனுக்கு இரவு முழுவதும் அவள் கனவில் தோன்றிச் சிரித்தாள். அவன் வந்து கதிரேசனிடம் அப்பெண்ணைத் தான் விரும்புவதாகக் கூறினான். கதிரேசன் அதைச் சிவராசாவுக்குக்கூறித் திருமணத்தை முடித்து வைத்தார். ஆகவே சிவனடியார்களே, சிவன் தான் வகுத்த விதிப்படி நடப்போர்க்கு பெரும் உதவிகள்

செய்வான். அவன் வெளிநாட்டில் வைத்தியராகப் பணிபுரிகிறான். அடுத்த நேரச் சாப்பாட்டுக்கு வழியில்லாதிருந்த சிவராசா இப்போ கோடீஸ்வரன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமலர்**

**என்ஆகம் துன்னவைத்த பெரியோன் எழிற்சுடராய்க்**

**கல்நா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்**

**பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 09**

அன்று காலை சிவராசா சுவாமியாரிடம் வந்து சொன்னான்; "எம்பெருமான் வகுத்த வழியில் சென்றதால் எனது மகளுக்குப் பெருவாழ்வு கிடைத்தது. பலர் என்னை வாழத் தெரியாதவன் என்றே சொல்வர். எனது மனைவியும் என்னைப் பிழைக்கத் தெரியாதவன் என்று கூறுவாள். விதிப்படி ஏழ்மை எம்மைவந்து சேரும். அதை நீக்கத் தீயவழியை நாடினால் துன்பங்கள்தான் பெருகும். சிவன் தான் வகுத்தவழியில் மக்கள் வாழ்கிறார்களா என்று அவதானிப்பான். என்னை நன்கு அவதானித்துவிட்டுத்தான் இந்தப் பெருவாழ்வைத் தந்தான். முன்பு பையைத்தவறவிட்டவர்களிடம் பணத்தைப் பெறும்படி வரோதயன் எனது மனைவிக்குக்கூற அவள் என்னை வற்புறுத்தினாள். அதை நான் கேட்காமையால் இரண்டு நாட்கள் சமைக்கவில்லை. இப்போ நான் தீர்க்கதரிசியாம். எப்படி வாழவேண்டும் என்று தனக்குச் சொல்லித் தருமாறு வரோதயன் கூறுகிறான். சிவனின் அருள் தாமதமாகக் கிடைத்தாலும் அது பெறுமதி வாய்ந்தது. மாணிக்கவாசகர் சொல்வது போல, "எந்நாளும் சிவனைப் போற்றிப்பணிவிடை செய்ய அவன் தனது திருவடியை எனது மனதில் பொருத்தி வைத்தான். அதனால் எனது கல்போன்ற மனம் கனியானது. பூரணனான அவன் என்னைப் பூரணப்படுத்தியுள்ளான் என்பது உண்மை. இப்போ எனது மனதுள் சிவசிந்தனையைத் தவிர வேறு எதுவும் இல்லை. அதனால் இனிப் பெருஞ்சேவை செய்யப்போகிறேன்" என்று உணர்ச்சி வசப்பட்டான் சிவராசா.

"மகனே, பலர் தெரிந்தும் நம்பிக்கையின்றி வாழ்கின்றனர். இன்னும் சிலர் ஆசையால் புலன்களை அடக்க முடியாது துன்பப்படுகின்றனர். நீ புத்தியுள்ளவன். பயனடைகிறாய்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்**

**சீரார் திருவடி யென் தலைமேல் வைத்தபிரான்**

**காரார் கடல்நஞ்சை உண்டுகந்த கபாலி**

**போரார் புறம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 10**

“சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; “பேராசை பிடித்த இந்த உடலின் உணர்வுகள் அழியவேண்டும் என்று திருப்பெருந்துறையில் கோவில் கொண்டிருக்கும் சிவபெருமான் தனது பெருமைமிக்க திருவடியை எனது தலைமேல் வைத்தான். அதனால் என் உணர்வுகள் அழிந்தன. அதற்குக் காரணமாக இருந்தது சிவன் நஞ்சை உண்டமையும், முப்புரங்களையும் அழித்தமையமாகும். தேவர்களின் நன்மைக்காக நஞ்சை உண்டான். மனிதனின் முன்னேற்றத்திற்காக மும்மலங்களையும் அழித்தான். இவ்விரு கோட்பாடுகளையும், மனதில் இருத்தினால் உடல் உணர்வை வெல்லலாம். இதைக் கதிரேசன் அடிக்கடி சொல்வார். தனது மனதில் இளமைக்காலத்தில் வேண்டாத நினைவுகள் ஏற்பட்டால் உடனே இக்கதைகளைத்தான் நினைப்பேன். நினைத்தவுடன் அவ்வுணர்வுகள் அற்றுப்போய்விடும் என்பார். காலையில் சிவராசாவும் அதைத்தான் சொன்னான். தனது முன்னேற்றத்துக்குக் காரணம் அக்கதைகள் தான் என்றவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**பாலும் அமுதமுந் தேனுடனாம் பராபரமாய்க**

**கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்**

**ஞாலம் பரவுவாவா நன்னெறியாம் அந்நெறியே**

**போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 11**

மிகுந்த மகிழ்வுடன் ஆச்சிரமத்திற்கு வந்த சிவராசா கதிரேசனை வணங்கிவிட்டுச் சொன்னான்; “ஐயா குடித்து, வெறித்துக் கொண்டும், குடும்பத்தைக் கவனியாதும் வாழ்ந்த என்னைச் சிவனது பெருமைகளை எடுத்துச் சொல்லி அவனை வழிபடு, உனக்கு வந்த துன்பங்கள் யாவும் பறந்துவிடும் என்றீர்கள். அது உண்மை. மாணிக்கவாசக சுவாமிகள் “பாலும் அமுதும் தேனும் சேர்த்து உண்பதைப் போன்ற சிவபெருமானது நினைவு உள்ளத்தைக் கொள்ளை கொண்டுவிட்டது. கடல்சூழ்ந்த இவ்வுலகில் வாழும் ஞானிகள் சிவனின் புகழைப் பாடிப்பணிவது போல நானும் பாடிப் பணிகிறேன். அதற்காகப் பூக்களைக் கொய்து படைக்கிறேன்” என்கிறார். சிவன்

வடிவங்களையெல்லாம் கடந்தவன். அடியார்களுக்காக இனிய வடிவங்களையும் எடுப்பவன். நல்லார் அவனைப் போற்றும் விதத்தில் நாமும் போற்றுவோம்" என்றும் கூறியுள்ளார். நீங்கள் சொன்னபடி நான் சிவனைப் போற்றி வருகிறேன். மருமகன் அடுத்த வாரம் இங்கு வந்து மனைவியையும், மூத்த மகளையும் அழைத்துச் செல்ல இருக்கிறார். மூத்தமகன் படித்து முடித்துவிட்டு வேலை கிடைக்காமையால் ஆச்சிரம வேலையைக் கவனித்தவன். அவனுக்கு ஒரு நல்ல வாழ்வைச் சிவன் அமைத்துக் கொடுத்துவிட்டார்" என்று மகிழ்ந்தான் சிவராசா.

**வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்கும்**

**கோனவ னாய் நின்று கூடலிலாக் குணங்குறியோன்**

**ஆன நெடுங்கடல் ஆலாலம் அமுதுசெய்யப்**

**போனகம் ஆனவா பூவல்லி கொய்யாமோ. 12**

சிவராசாவிற்குக் கதிரேசன் சொன்னார்; "நீ சிவனை மாணிக்கவாசக சுவாமிகள் கூறியதுபோல வழிபட்டாய். இந்திரன், மால், அயன் மற்றும் தேவர்களுக்கும் அரசன் சிவன். அவன் மாயையோடு சம்பந்தப்பட்ட எவருக்கும் எட்டாதவன். மாயையால் வரும் கேடுகளைப் பக்தர்களுக்கு அவன் வரவிடாது தடுப்பான். அத்துடன் அவற்றை நலமாக மாற்றுவான். அதனால்தான் அவன் உனக்கு உதவியவன். இங்கு வாழும் பலர் ஆசைவசப்பட்டு வணங்குவது காரணத்திற்காக. வடிவேலுவின் மகன் சென்ற வருடம் சிவன் தன்னை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று தூக்குக்காவடி எடுத்தவன். இவற்றால் பலனில்லை. சுத்தமான மனதுடன் சிவனை நினைத்தபடி யார் சேவை செய்கிறார்களோ, அவர்கள் கேளாமலே அவன் நல்லவற்றைச் செய்வான். நீ அந்த வெளிநாட்டவரின் பைக்குள் இருந்த பணத்தை எடுத்துவிட்டுப் பையை வீசியிருந்தாலோ, இல்லாவிட்டால் அவர் சன்மானமாகத் தந்த பணத்தைப் பெற்றிருந்தாலோ இந்த நிலையை அடைந்திருக்க மாட்டாய். உனக்கு வரோதயன் ஆசையை ஊட்டி மாயையின் வசம் சிக்கப்பண்ண முயற்சித்தான். அதைச் சிவன்விட வில்லை. ஏனென்றால் சிவபக்தனுக்கு மாயையால் வரும் கேடுகளைச் சிவன் நன்மை தரும்படி மாற்றியமைப்பான். இது தான் நடைமுறை. அதனால் மேலும் தொண்டுகளைச் செய்" என்றார் கதிரேசன்.

**அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி**

**நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்**

**நின்றார ஏத்தும் நிறைகழலோள் புனைகொன்றைப்**

**பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 13**

ஆச்சிரமத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றினார்; "சிவனடியார்களே, மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார்; "அன்று ஆலமரநிழலின்கீழ் வேதங்களை நல்லமுறையில் வானவர்களுக்கும், மாமுனிவர்களுக்கும் தினமும் உபதேசித்தருளிய வீரக்கழல்களை அணிந்து, சடையில் கொன்றை மலர்களைச் சூடிய சிவனைப் புகழ்ந்து பாடி நாம் பூவல்லி கொய்து மாலையணிவிப்போம். அவன் மாயாசகிதனாய், சகுனப் பிரமமாய் இருப்பதைச் சான்றோர் அனைவரும் சர்வகாலமும் போற்றியவாறு இருக்கிறார்கள்" என்கிறார்.

**படமாக என்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்**

**கிடமாகக் கொண்டிருந் தேகம்பம் மேயபிரான்**

**தடமார் மதில்தில்லை அம்பலமே தானிடமத**

**நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ. 14**

சிவராசா சற்று உணர்ச்சிப் பெருக்குடன் சிவன் கோவிலுக்கு வந்தான். அங்கு பலர் கூடி நின்றதை அவன் அவதானிக்கவில்லை; "எம்பெருமானே, மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவதுபோன்று வரையப்பட்ட படமாக என்நெஞ்சில் நீ உள்ளாய். அதனால் எனக்குப் பெருவாழ்வு கிட்டியுள்ளது. எனது இரண்டாவது மகள் பட்டதாரி. படித்து முடித்துவிட்டு உனக்குச் சேவை செய்கிறாள். இப்பொழுது அவளுக்கு நூறு மைல்களுக்கு அப்பால் வேலை கிடைத்துள்ளது. வேலை கிடைத்துவிட்டது என்று மகிழ முடியவில்லை. சிறு வயது முதல் உனது சன்னிதானத்தைக் கூட்டிக் கழுவிக் கொண்டிருந்தவள். அந்த வேலை பாதிக்கப்பட்டு விட்டது என்று காலையில் இருந்து உண்ணாமல் இருக்கிறாள். எல்லாம் உன்னுடைய திருவிளையாடல். உனது விருப்பப்படி செய்" என்று கூறிவிட்டுத் திரும்பியபோது கதிரேசன் எதிரே வந்து சிரித்தார்; "அவளது இடமாற்றம் இரத்துச் செய்யப்படும் நீ போ" என்றார். "மகிழ்ச்சி அண்ணை" என்றவாறு திரும்பினார். அவரைக் காணவில்லை. "மனப்பிரேமையாக இருக்குமோ" என்றவாறு

நடந்தபோது எதிரே வரோதயன் வந்து, “திரும்பு முதுகைப்பார்ப்பம்” என்று கூறிவிட்டு, “உன்னுடைய சிவபெருமான் முதுகில் எழுதியிருந்தால் பார்க்கலாம். மனதிலல்லவா எழுதியுள்ளார்” என்றான் விகடமாக. சிவராசாவுக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது. மிக மிகச் சிரமப்பட்டு அடக்கினான். அப்போது அவனது இளையமகள் சாரதா வந்து சொன்னாள், “அப்பா எனக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது. சின்னராசாவின் மகள் பூரணி மன்னாரில் திருமணம் செய்தவள். அதனால் அங்கு செல்ல விரும்புகிறாள். அதனால் இருவரும் ஒத்து மாறியுள்ளோம்” என்று கூறிக்கொண்டிருக்கும்போது கதிரேசனும் நல்லைநாதனும் வந்தனர். “சாரதாவுக்கு ஊருக்கு மாற்றம் கிடைத்துவிட்டதாகக் கேள்விப்பட்டேன்” என்றார் கதிரேசன்.

வியப்புடன் கதிரேசனது முகத்தை நிமிர்ந்து பார்த்தார் சிவராசா. “அப்போ முன்பு உனது மகளுக்கு இடமாற்றம் கிடைக்கும் என்று சொன்னது யார்...? கதிரேசனது உருவில் வந்த சிவனா…?” மெய்சிலிர்த்தது சிவராசாவுக்கு.

**அங்கி அருக்கன் இராவணன் அந்தகன் கூற்றன்**
**செங்கண் அரிஅயன் இந்திரனுஞ் சந்திரனும்**
**பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்**
**பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 15**

சிவராசா, சந்தோசப்பட வேண்டிய நேரத்திலை திகைத்துக் போய் நிற்கிறாய்?” என்று கேட்டார் கதிரேசன்.

“எம்பெருமான் என்னைத் திகைக்க வைக்கிறார். எனது மகள் வேலை கிடைத்ததும் மகிழ்ச்சியடைவாள் என்று நினைத்தேன். அவள் விம்மி விம்மி அழுதாள். சிறுவயது முதல் நானும் சிவனும் பிரியாதிருக்கின்றோம். இப்ப எப்படிப் பிரிவது. எனக்கு இந்த வேலை வேண்டாம்” என்று கூறி உண்ணாது அழுது கொண்டிருந்தாள். அதனால் அதை வந்து சிவனிடம் முறையிட்டேன். அப்போது நீங்கள் வந்து, “உனது மகளின் இடமாற்றம் இரத்துச் செய்யப்படும் என்றீர்கள். அது நடந்து விட்டது” என்றபோது கதிரேசன் சொன்னார்; “நான் இப்போது தான் இங்கு வருகிறேன். நான் அப்படிச் சொல்லவில்லை. சிவன்தான் அதைச் செய்துவிட்டுச் சொல்லியிருக்கிறார். அவர்

அன்பர்களுக்கு அன்பன். அடியார்க்கு அடியவன். அதுபோல அவனுக்கு எதிராகச் செயற்படுபவர்களைத் தண்டிப்பவன். அக்கினிதேவன், சூரியன், அந்தகன் என்ற அரக்கன், யமன் போன்றோர் தமது சொந்த நலனுக்காகச் செயற்பட்டபோது அவர்களைச் சிவன் தண்டித்தவன். அவர்கள் பெரும் நிலையில் இருந்தாலும் அவர்கள் துன்பப்படுவர். அதற்காக மாணிக்கவாசக சுவாமிகள் பூக்கொய்து மாலைகட்டிச் சூட்ட வேண்டும் என்கிறார்".

"சிவன் அவர்களைத் தண்டித்ததுபோல வரோதயனையும் தண்டிக்க வேண்டும். இப்போது நான் மாணிக்கவாசக சுவாமிகள் தனது நெஞ்சில் சித்திரமாக நீயுள்ளாய் என்று சொல்கிறார். அதை நானும் சொல்லி வணங்க வரோதயன் வந்து என்னைச் சுற்றிப் பார்த்துவிட்டு, "உனது கடவுள் முதுகில் சித்திரமாக இருந்தால் பார்க்கலாம். மனதில் இருப்பதை எப்படிப் பார்ப்பது" என்று கேலி செய்கிறான். எனக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. சிவனை நினைத்து அடக்கினேன்" என்ற போது கதிரேசன் சொன்னார்; "மகனே, நீதியானாலும் அதை நாம் கையில் எடுக்கக்கூடாது. சந்தர்ப்பம் வரும்போது அவன் புரிந்து கொள்வான். இப்படிப் பலரை நான் கண்டுள்ளேன். அவர்களில் பலர் இப்போது ஆச்சிரமத்தில் தங்கியிருக்கிறார்கள்" என்றார்.

**திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு**

**மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்**

**தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட**

**புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 16**

"அண்ணை, எங்கள் ஊரில் உள்ள ஆச்சிரமம் சைவசமயத்தை வளர்க்கிறது. சைவமக்களுக்குத் தொண்டு செய்கிறது. சைவச்சிறார்களுக்கு நல்லுபதேசம் செய்கிறது. அவர்கள் கற்க உதவுகிறது. என்போன்ற கற்காத பலர் சமயஅறிவுபெற வாய்ப்பளிக்கிறது. திருவாசகம் முழுவதற்கும் பொருளை உணர்த்தும் பிரசங்கங்களால் மக்கள் பெரும் நன்மையடைந்துள்ளனர். எனக்குத் திருவாசகமென்று எழுதத் தெரியாதே தவிர திருவாசகப் பாடல்கள் பலவற்றை மனனம் செய்து அதைப் பொருளுணர்ந்து ஓதி வருகிறேன். அதனால்தான் சிவகடாட்சம் எனக்குக் கிடைத்துள்ளது. அண்டம் முழுவதையும் ஆழவும், அழிக்கவும் வல்லமை கொண்ட எம்பிரானான சிவபெருமான் தனது பக்தருக்காக அடியும் வாங்கியுள்ளான். சர்வவல்லமை படைத்த ஆண்டவன் அடியவருக்காக அடிவாங்கினானென்றால் அவனது அன்பை எப்படி

உணர்வது, உணர்த்துவது என்று மாணிக்கவாசக சுவாமிகள் சொல்கிறார். அதை நினைக்க எனக்கு மெய்சிலிர்க்கிறது. அடியவருக்காக அடிவாங்கிய அச்சிவன். எனது அன்புக்காக என்னை மேம்பாடடைய வைத்துள்ளான். இது புதுமை அல்ல" என்றான் சிவராசா.

**முன்னாய மாலயனும் வானவரும் தனவரும்**

**பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே**

**என்னாகம் உள்புகுந் தாண்டு கொண்டான் இலங்கணியாம்**

**பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.** **17**

"மகனே, முன்பு மாலும், அயனும், தேவர்களும், அசுரரும் சிவனைப் புறத்தே வைத்து வழிபட்டனர். அதனால் அவர்களால் சிவனைக் கண்டறியமுடியவில்லை. உன்போன்ற அடியவர்கள் சிவனை உள்ளத்தில் வைத்து மகிழ்வுடன் ஆராதிக்கின்றனர். அதனால்தான் அவ்வடியார்க்காகச் சிவபெருமான் இரங்கியவர். அந்த இரக்கம் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுக்க வைத்தது. மாசற்ற அன்பைச் செம்மனச்செல்வி, தன்னுள்ளத்தில் வைத்துப் பூசித்தமையால் அவளுக்காகச் சிவன் அடிவாங்கினார். மாணிக்கவாசகருக்காக வைகை நதியைப் பெருகச் செய்தவர். இது முழுமையான அன்பால் ஏற்பட்ட தொழிற்பாடு. தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள் தமது திறமையை, வலிமையை மனதில் கொண்டு கடுந்தவம் புரிந்து வரங்களைப் பெறுகின்றனர். வரங்களைப் பெற்றதும் தாம் வலிமையானவர்கள் என உணர்ந்து செயற்படுகின்றனர். அச் செயற்பாடு அவர்களைக் கர்வங்கொள்ள வைக்கிறது. அதனால் முன்பைவிடக் கேவலமானவர்களாகின்றனர். திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சிவனின் அருள் கிடைக்க கிடைக்க அவர் சிவனின் அடிமையானவர். இதுதான் ஆட்கொள்ளப்படும் நிலை. அடியார்கள் எல்லோரும் இவ்வாறுதான் நடந்து கொள்கின்றனர். அதனால் சிவபெருமான் தனது தனித்தன்மையை, பெருமையைவிட்டுக் கீழிறங்கி அடியார்க்கு உதவி அடியும் வாங்குகிறார்" என்றார் கதிரேசன்.

**சீரார் திருவடித் திணசிலம்பு சிலம்பெகாலிக்கே**

**ஆராத ஆசையதாய் அடியேன் அகமகிழத்**

**தேராந்த வீதிப் பெருந்துறையான் திருநடஞ்செய்**

**பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.** **18**

சிவராசா, சிவபக்தியில் ஊறியவர்களின் உள்ளத்தில் இனிய நினைவுகள் எழும். துன்பம் என்பதே சிவநினைவுக்கு முன் வராது. அதனால் மனம் எப்போதும் மகிழ்வடையும். அதனால் மனதில் ஓர் இனிய கீதம் எழுந்து கொண்டிருக்கும். அதை மாணிக்கவாசக சுவாமிகள் சிலம்பொலி என்று கூறுகிறார். சிவபெருமான் தில்லையம்பலத்தில் கூத்தாடும்போது காலில் கட்டிய சிலம்பின் ஒலி தனக்கு எந்நேரமும் கேட்டுக் கொண்டிருப்பதாகக் கூறுகிறார். மனம் சார்ந்ததன் வண்ணமாக இருக்கும். சிவனைச் சார்ந்தவனின் உள்ளம் சிவநினைவாகவே இருப்பதால் அவனுக்கு நடப்பதெல்லாம் நல்லதாகவே அமையும். அதுதான் எனக்கும் உனக்கும் நடைபெறுகிறது. உனது மனம் சிவனை எவ்வேளையிலும் நினைப்பதால் அது சிமமயமாகிவிட்டது. உனக்கு என்னில் முழுமையான அன்புண்டு. அதனால் சிவன் என்னுருவில் வந்து உனது மகளுக்கு இடமாற்றம் வந்து விட்டது என்று சொல்லி மறைந்தவர். தற்போதைய மனிதர்கள் இதை நம்பமாட்டார்கள். அதற்குக் காரணம் தேவர்களைப் போலத் தம்மைவிட உயர்ந்தவர்கள் யாருமில்லை என்ற நினைப்பு அவர்களை அப்படிச் சிந்திக்க வைக்கிறது. தேவர்கள் பட்டும் பட்டும் மாற்றமடையாததுபோல மனிதர்களும் துன்பப்பட்டபோது இறைவனை நம்பிவிட்டு அத்துன்பம் நீங்கியதும் பழையபடி தம்மை உயர்வாகக் கருதுகின்றனர். சிவனை நினைத்துக் கொண்டிருப்போர் அவனோடு கதைப்பார்கள். சிவனை நினைப்பவாகளின் மனம் அளவுக்கதிகமாக மகிழ்ச்சியை அடைவதால் என்ன நடைபெறுகின்றது என்ற நினைவும் இல்லாதிருக்கும். இதை நீ ஒரு முழுமையான சிவபக்தன் என்பதால் சொன்னேன். வேறு யாருக்காவது சொன்னால் இதை நம்பமாட்டார்கள். சிலர் கதிரேசனுக்குத் தட்டி விட்டதென்பர். சிலர் அவர் தன்னைப் பெருமைப்படுத்துகிறார் என்பர். மெய்யடியாரின் மனதில் சிலம்பொலி கேட்கும்" என்று கதிரேசன் சொன்னபோது சிவராசா சொன்னான்; "எனது மனதிலும் ஓர் ஒலி உண்டாவதுண்டு. அது சிவன்கோவில் மணியோவை போல இருக்கும்" என்றான்.

"அது அவரவரின் மனநிலையைப் பொறுத்தது. மாணிக்கவாசக சுவாமிகள் சிவனின் காற்சிலம்பொலி என்கிறார். நீ கோவில் மணி ஒலி என்கிறாய். எனக்கு 'நமசிவாய' என்ற தமிழ் மந்திரமே ஒலிக்கிறது" என்றார் கதிரேசன்.

**அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்**

**பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாம்**

**முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்**

**புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.** **19**

சிவராசா, சிவகுருநாதன் என்ற வர்த்தகரின் வீட்டில் கூலி வேலை செய்பவன். விறகு கொத்துதல், மாடுகளைப் பராமரித்தல், வீட்டைத் துப்பரவு செய்தல் முதலியன அவனது வேலைகள். சிவகுருநாதனின் வீட்டில் வேலைகள் இல்லாவிட்டால் வேறு எங்காவது சென்று வேலை செய்வான். அவன் சம்பளத்திற்கு வேலை செய்யாது தன்னை முழுமையாக அர்ப்பணித்து மிகவும் கடுமையாக உழைப்பான். அதனால் எல்லோரும் அவனை விரும்புவர். அதனால் அவனுக்கு ஓய்வு இராது. இது அவர்களது பிள்ளைகளுக்கு விருப்பமில்லை. அவனது இரண்டாவது மகள் பூரணி சொன்னாள்; "அப்பா நாங்கள் சிறுவயதாக இருக்கும் காலத்தில் இருந்து கடுமையாக உழைத்து எம்மை வளர்த்தீர்கள். இப்போ நாம் உழைக்கத் தொடங்கிவிட்டோம். அதனால் கூலிவேலை செய்வதை நிறுத்திவிட்டு முழுமையாகச் சிவசேவை செய்யுங்கள்" என்றாள். முழுமையான சிவசேவை என்றதும் சிவராசாவின் மனம் மகிழ்வுடன் மாறியது. அதனால் அவன் கூலிவேலை செய்வதை விட்டுவிட்டுக் கோவில் வேலைகளைச் செய்யத் தொடங்கினார். அத்துடன் தான் ஒரு சிவபக்தன் என்ற உணர்வு அதிகரித்தது. அன்று அவன் கோவிலைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருக்கும்போது சிவகுருநாதன் ஒரு வாகனத்தில் வந்து இறங்காமல் இருந்தவாறு, "சிவராசா, நாளைக்கு வீட்டுக்கு வா, வீடு கழுவ வேண்டும்" என்றார்.

"இப்போ நான் கூலிவேலை செய்வதில்லை. சிவனது வேலைகளை மட்டும்தான் செய்கிறேன்" என்றான் சிவராசா நின்ற இடத்தில் நின்றவாறே.

அது சிவகுருநாதனுக்குப் பிடிக்கவில்லை. முன்பென்றால் தோளில் சால்வை போட்டிருந்தால் அதைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டுதான் கதைப்பான். அன்று தலைப்பாகையைக் கழற்றாது கதைத்தது அவருக்கு கோபத்தை வரவழைத்தது; "முன்பு எம்மைவிட்டால் சாப்பாட்டுக்கு வழியில்லை. இப்ப பணம் வந்ததும் தலை, கால் புரியவில்லை" என்றார்.

"ஐயா, அப்படியல்ல. அரசாங்கமே அறுபது வயதில் ஓய்வு கொடுக்கிறது. எனக்கு அறுபத்துமூன்று வயது. மாடாக உழைத்துக் களைத்து விட்டேன். அதனால் வேலை செய்ய முடியாதிருக்கிறது" என்றான்.

"பணம் வராவிட்டால் சாகும்வரை உழைக்க வேண்டும்…." என்று சிவகுருநாதன் சொல்லச் சிவராசா சொன்னான்; "என்னால் முடியவில்லை என்றால் விட்டுவிடுங்கள். உங்களுக்கு நாற்பது வயது வேலை செய்யலாம் தானே. எனக்குச் சிவன் தந்த வாழ்வைச் சிவசேவை செய்தே கழிக்க விருப்பம்" என்று சொல்லிவிட்டுச் சென்று விட்டான்.

சிவகுருநாதனுக்கு அடக்க முடியாத கோபம் வந்தது. கோவிலில் நின்ற நல்லைநாதனிடம் சென்று சொன்னார்; ''பணம் வந்தால் முன்னைய வாழ்வை மறந்து விடுகிறார்கள். சிவராசா என்னுடன் அதிகமாகப் பேசுகிறான்''

"நீங்கள் நினைப்பது தவறு. வாழ்க்கை மாறினால் மனிதனும் மாறுவது இயற்கை. அறுபத்தைந்து வயதுடைய ஒருவன் வேலை செய்யாமல் விடுவது அகங்காரமா..? பலகாலமாகத் துன்பப்பட்டவன் வசதி வந்தால் வசதியாக வாழ நினைப்பது குற்றமா…?" என்று கேட்டார் நல்லைநாதன்.

''அது பிழையில்லை. ஆனால் திமிராகப் பேசியது தான் எனக்குப் பிடிக்கவில்லை'' என்றார் சிவகுருநாதன்.

''உங்களுக்குப் பிடிக்காததை அவன் சொன்னால் அது திமிரா? அவன் பெரும் சிவபக்தன். அகங்காரம் என்னும் யானையை ஒழித்தவர்களுக்குச் சிவப்பித்து அதிகரித்து விடும். அதன் விளைவாக விவேகமும் அதிகரிக்கும். அவன் தன்னை இப்போ சிவனுக்கு ஒப்படைத்து விட்டான். அதனால் அவனைத் தொந்தரவு செய்யாதீர்கள்'' என்றார் நல்லைநாதன்.

**மாவார வேறி மதுரைநகர் புகுந்தருளித்**

**தேவார்ந்த கோலந் திகழப் பெருந்துறையான்**

**கோவாகி வந்தெம்மைக் குற்றவேல் கொண்டருளும்**

**பூவார் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. 20**

சிவராசா கூட்டிக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்த நல்லைநாதன் நிலத்தில் இருந்த விளக்குமாறை எடுத்துக் கூட்டியவாறு சொன்னார்; "சிவகுருநாதன் உன்மீது கடுங்கோபம் கொண்டுள்ளான்."

"சிவன் என்னோடு இருக்கிறான். பிறகேன் நான் கவலைப்பட வேண்டும். மாணிக்கவாசகரின் மீது கொண்ட அன்பின் நிமிர்த்தம் சிவன் குதிரைத் தலைவனாக உருமாறி வந்து மாணிக்கவாசகரை ஆட்கொண்டருளியவன். அவனுடைய திருவடி மலர்களைப் போற்றுவோர்க்குத் துன்பம்வர அவன் விடமாட்டான். இயலாமை காரணமாக ஒருவன் வேலை செய்ய மறுத்தால் அவன்மீது கோபம் கொள்வது நியாயமா…?

சிவகுருநாதனின் தந்தை பெரிய கோடீஸ்வரனா…? இல்லையே. அவரும் கூலிவேலை தானே செய்தவர். இதை மறந்துவிட்டுப் பேசுகிறார். எனக்குச் சிவன் தந்த பொருள் பலதலைமுறைக்குக் காணும். சிவனே பொருளைத்தந்து தனக்குச் சேவகம் செய்யும்படி அருள நான் சேவகம் செய்கிறேன். அவன் என்னை எப்போதும் காப்பான். அதனால் எனக்கு யாரினது உதவியும் தேவையில்லை” என்றான் சிவராசா.

திருச்சிற்றம்பலம்.